### தமிழகத்தில் 2020-க்குள் அனைத்து

# தசைச் சிதைவு நோய் பாதித்த குழந்தைகளையும் கண்டறிவோம்

## கோவையில் இயக்குனர் டாக்டர் லட்சுமி தகவல்

கோவை, அக்.24-

தமிழகத்தில் வருகிற 2020-க்குள் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட அனைத்து குழந்தைகளையும் கண்டறிந்து அதற்கான சிகி;ச்சையை மேற்கொள்வோம் என்று டாக்டர் லட்சுமி தெரிவித்து உள்ளார்.

கோவை நீலாம்பூரில் உள்ள ராயல் கேர் உயர் சிறப்பு மருத்துவமனையில் மரபணு பரிசோதனை, கலந்தாய்வு. புராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் செயல்படு கிறது. இதன் பல்துறை பராமரிப்பு மைய தொடக்க விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வந்த அனைவரையும் தன்னார்வ் தொண்டு நிறுவனர் முனைவர் டாக்டர் பி.ஆர்.லட்சுமி வரவேற்றார். விழாவிற்கு ஹெல்த் கேர் குளோபல் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி டாக்டர் ராகவேந்திர ராவ் தலைமை வகித்தார். கோவை அரவிந்த் மருத்துவ மனைத்தலைவர் டாக்டர் கல்பனா நாகேந்திரன் சிறப்பு அழைப்பாளராக் கலந்து கொண்டு உரையாற்றினார். இதில் ராயல் கேர் மருத்துவமனை நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் மாதேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக வரவேற்புரையில் டாக்டர் லட்சுமி பேசியதாவது,

உலகம் முழுவதும் 3500 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு தசைச்சிதைவு நோய் இருப்பதாக கண்டறியப்பட்டு உள்ளது. அதிலும் தமிழத்தில் இந்த நோய் அதிகமாக இருப்பதாக தெரிகிறது. பொது வாக இந்த நோய் ஆண் குழந்தைகளை மட்டுமே தாக்குகிறது. நாங்கள் இந்த நோய் பற்றி தற்போது பொது மக்களிடையே விழிப்புணர் வினை ஏற்படுத்தி வருகிறோம். வரும் 2020-க்குள் தமிழகத்தில் தசைச்சிதை வினால் பாதிக்கப்பட்ட அனைத்து குழந்தை களையும் கண்டறிவோம். இந்த நோய்க்கு இது வரை சரியான மருந்துகள் கண்டறியப் பட வில்லை என்பது வேதனையான விஷ யம். இந்த நோய் மரபணு மூலம் ஏற்படு வதாகவும், நெருங்கிய உறவு முறை திரு மணம் செய்யும் தம்பதிகளுக்கு இது ஏற்படு வதாகவும் தெரிய வந்து உள்ளது. எனவே, நெருங்கிய உறவு முறை திருமணத்தை தவிர்க்க வேண்டுகிறோம். தற்போது எங்கள் அமைப்பின் மையம் கோவை, சென்னை, திருச்சி போன்ற இடங்களில் உள்ளது. தசைச்சிதைவு நோய் ஏற்பட்ட குழந்தைகளு க்கு எங்கள் மையம் மூலம் சிகிச்சை, பயிற்சி போன்றவைகளை வழங்கி குணப்படுத்தி வருகிறோம். 2 வயதுக்கு மேல் தான் பெற்றோ ரு க்கு குழந்தைக்கு இந்நோய் ஏற்பட்டு உள்ளது என்று தெரிய வரும். இந்நோய் பாதிக்கப் பட்ட குழந்தைகள் சரியாக வாய் பேச மாட் டார்கள். புரிதலும் குறைவாக இருக்கும். எந்த செயலையும் ஆர்வம் காட்ட மாட்டார்கள். இதில் இருந்து பெற்றோர் நோய் பற்றி தெரிந்து கொண்டு மருத்துவரிடம் காண் பித்து தெரிந்து கொள்ள வேண்டுகிறோம். மேலும் விவரங்களுக்கு 9489053705, 9489053702 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

தமிழ் சுடர்
(24-10-2019)